
# வேதாந்த மரத்தில் சில வேர்கள்!




இக்கட்டுரைத் தொகுப்பில் ஏழுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அத்துனையிலும் பாரதியின் சிந்தையோடு யாவற்றையும் அணுகியுள்ளார் நூலாசிரியர். பாரதியைத் தன்னுடைய ஞான ஆசான் எனும் தன் கூற்றை தனது ஒவ்வொரு எழுத்திலும் மெய்ப்பிக்கிறார். மந்திரம் போல் வேண்டுமடா எனும் பாரதியில் சொல்லாலேயே விளையும் முதற்கட்டுரையில், சொல்லின் வீரியத்தை, அது அதன் உச்சரிப்பாலும், உணர வேண்டும் என்கிறார். எல்லா மொழியிலும் சொற்களுக்கு வலுவுண்டு என்பதனைக் கூறவிழைந்தவர், சிலப்பதிகாரத்தினின்று, கவுந்தியடிகள் கூற்றாக வெளிப்பட்டதைக் காட்டுகிறார். தொல்காப்பியர் சுட்டும் நிறைமொழி மாந்தர் என்பதனை, வள்ளுவன் குறளோடும், பரிமேலழகர் விளக்கத்தோடும் தருகிறார். அத்தகைய நிறைமொழி மாந்தருள் ஒருவளே கவுந்தியடிகள், அவள் கூற்றே அறமாகியது என்கிறார். தமிழில் அறம்பாடுதல் எனும் மரபுண்டு. நடிப்பிசைப் புலவர் எனப்பட்ட கே.ஆர். இராமசாமி, ஒரு படத்தில் நான் பாட மாட்டேன் எனப் பாடியதையும் அதன்பின் அவர் நடிக்கவேயில்லை என்பதையும் நினைவு கூர்கிறார். அப்பாடலில், என் குலமும் குடியும் ஓய்ந்தடா எனும் வரிகளும் உண்டு என்பர். ஈண்டு, நினைவுக்கு வருவது, நந்திக்கலம்பகமும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் வாழ்வில் நிகழ்ந்ததும். ஒருவருக்கு எழுதிய மடலில், அவரது பெயரை, தலைபெழுத்துடன் எழுதியுள்ளார், செய்யுள் அமைவுக்காக, அது **சா.போற்றிக்கண்ணு நீயே!** என ஈற்றடியாக அமைந்து, அம்மடலைக் காணும் முன்பே, பெறவேண்டியவர் இறந்து விடுகிறார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே எனும் பாரதியின் வாக்கே அடுத்த கட்டுரையாகிறது. இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே எனும் தொடர்ந்த வரிகளின் மீது ஒரு விமரிசனம் உண்டு. அதுவே இங்கு முழுவதும் ஆய்வுக்குள்ளாகிறது. சான்றுக்கு கம்பனையும் வள்ளுவனையும் வழக்கம்பொல் அவர் விட்டு வைக்கவில்லை. அவரது முயற்சியும் நிரூபணமும் எழுதுதல் என்பது, தவம், எழுத்து இறைவன் அளிக்கும் கொடை என்பதே. கண்ணதாசன் ஓரிடத்தில், நான் படித்த படிப்பெங்கே, எழுதும் எழுத்தெங்கே, என்படிப்புக்கு நாலரைகோடி கண்ணதாசன்கள் இருந்திருக்க வேண்டும் என்பார். நூலாசிரியர் எப்போதும் சொல்வார், பாரதி ஒரு யுவ புருஷன் என்று. அது மிகையல்ல. தமிழில், உரையும் கட்டுரைகளும், வள்ளுவருக்கும் பாரதிக்கும் மட்டும்தான் 600 மேற்பட்டு வெளிப்பட்டுள்ளன என்பர்.

'வேய்ங்குழல்' கவிதை எனும் கட்டுரை, பாரதியின், எங்கிருந்து வருகுவதோ எனும் பாடலோடு, தொடங்கி, அது, கண்ணனின் குழலோசை எனும் முடிவாக நிறைவதைச் சுட்டி, குழல் என்னும் சொல், மற்ற இலக்கியங்களில் பயின்று வருதலையும், அந்த ஓசையில் எங்ஙனம் பாரதி அமிழ்ந்துள்ளான் என்பதையும் அழகுடன் விவரிக்கிறார்.

நான்காவது கட்டுரை, பாரதிக்குச் சுதந்திரம் என்றால், அந்நியரிடமிருந்து மட்டுமல்ல, புதைந்து போன சிந்தனைகள், பெண்ணடிமை சிந்தனை, ஆகியவற்றினின்றும் விடுதலை என்பதாகத்தான் பாரதி தேடிய விடுதலை என்கிறார். சிறப்பாக, பாரதி ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பை பொதுவில் வைப்போம் என்கிறான். அவனுடைய புதிய ஆத்திசூடி முதலான அனைத்து படைப்புகளிலும் அவன் சொல்ல விழைவது, சிந்தையிலே தெளிவு, தன்னிலை உணர்தல், முதலான அனைத்திலுமான விடுதலைதான் என்பது நூலாசிரியர் கருத்து. அவர் மேலும், தன்னுடைய ஞான ஆசான் பாரதியைப் பற்றிக் கூறுமிடத்து அவன் ஆன்மாவுக்கே விடுதலை தேடியவன் என்பார்.

பாரதியும் இசையும் என்னும் இக்கட்டுரைதான் இத்தொகுப்பிலேயே மிகவும் பெரியதாகும். பாரதி தெள்ளிய இசையறிவு கொண்டவன். பாரதீ என்பது, சரஸ்வதியைக் குறிக்கும் ஸம்ஸ்கிருதத் சொல். பாரதி ஒர் ஆசுகவி, வரகவி. அவன் கவி புனைவதால் மட்டும் கவிஞன் அல்லன். கவி என்றால், ஸம்ஸ்கிருதத்தில், முக்காலும் உணர்ந்தவன், சிந்தனையாளன், முனிவன் எனப் பல பொருள்படும். அதற்கு முற்றிலும் தகுதியானவன் பாரதி என்கிறார். 39 ஆண்டுகள் வாழ்ந்த அந்தக் கவிஞனின் வழி வெள்ளமெனக் கவிதைகள் தந்தாள் பராசக்தி என்கிறார்.

இம்மாநிலம் பயனுற வாழ்வதற்கே, வையத்தைப் பாலித்திடல் வேண்டும் என்னும் பாரதியின் சொற்கள் அவனை நன்கு உணர்த்தும் என்கிறார். பாரதியின் இசையறிவு குறித்து, அவரது மகள் சகுந்தலா பாரதி உள்ளிட்ட, சில இசையறிஞர்களோடு, வ.ரா வும், நன்கு பதிந்துள்ளார். மூன்று தேவியர் துதி, முதலான, சிறப்பித்தப் பாடல்களோடு, அவர் தனது மனைவி செல்லாமாளோடு, நிகழ்த்திய உரையாடல்களையும், அவரது மகள் மூலம் பதிவிட நூலாசிரியர் தவறவில்லை. அத்தோடு நில்லாமல், பற்பல பாடல்களில், பண் முதலானவற்றைக் குறித்து விட்டு பாரதி, பாடுவோரின் விழைவுக்கும் அனுமதி வழங்குகிறான் என்பதையும் நிறுவுகிறார். சுப்பிரமணிய யோகி, வே. சாமிநாத சர்மா ஆகியோரது கருத்துக்களையும் பகிர்கிறார் ஆசிரியர்.

பாஸ்கரத் தொண்டைமான், உலகநாத நாயகர், பி.ஸ்ரீ, வையாபுரிப்பிள்ளை, நாமக்கல் கவிஞர் ஆகியவரது பார்வைகளையும் நம்முன் காட்டுகளுடன் வைக்கிறார். மு. அருணாச்சலம், முத்துசாமி திக்ஷிதர் முதலானவர்களின் கருத்துகளும் பகிரப் படுகின்றன. கும்மி முதலான, பழந்தமிழ் வழக்குகளையும் பாரதி விடவில்லை என்பதையும் விவரிக்கிறார்.

பாரதியின் முதல் படைப்பு சின்னசாமி ஐயருக்கு மகனாக எட்டயப் புரத்தில் பிறந்த பாரதி, எட்டயபுரம் மன்னருக்கும் தனது 15 வது வயதில் எழுதிய கவிதை வரியிலான மடலே பாரதியின் முதல் படைப்பாகும், என்கிற நூலாசிரியர் காட்டுகள் தருகிறார். இளசை சுப்பிரமணியன் என்று தன் பெயரைப் பதிப்பிப்பது பாரதியின் தன்மையைக் காட்டுகிறது என்கிறார்.

பாரதியின் குறளடி யாப்பு என்னும் வகையில், கண்ணன் திருவடி எண்ணுக மனமே எனும் பாவினைச் சுட்டுகிறார். பதிப்பித்தவர், ஆண்டு, குறளடி விளக்கம் யாவும் தருகிறார், நூலாசிரியர். இதுவே இந்நூலுள் கடைசி கட்டுரை.

கவிஞர் வாலி ஒருமுறை நகைச்சுவையாகக் கூறினார். பாரதி, கண்ணம்மா, கண்ணம்மா என்பார். கண்ணதாசன், கிருஷ்ணப் பிரபு என்பார். பாரதி கிருஷ்ணாம் பேட்டைக்கும், கண்ணதாசன் கண்ணம்மா பேட்டைக்கும் சென்றனர் என்பார்.

கண்ணதாசன், தான் காலமாவதற்கு, ஓரிரு ஆண்டுகள் முன், தனது, இதழில் பதிவு செய்கிறார். பாரதி, மிகப் பெரிய கலைஞன். இந்தச் சமூகம், உய்ந்திட வேண்டும், உயர்வடைய வேண்டும் என்னும் ஒரு நோக்கத்துடனேயே வாழ்ந்து, படைப்புகள் செய்தான். அவனது, சில நல்ல படைப்புகளை, இருட்டடிப்பு செய்து விட்டனர். அவற்றை தொகுத்துள்ளேன். அடுத்த ஓரிரு ஆண்டுகளில் அவனது நூற்றாண்டு வருகிறது. அதில் அவற்றை வெளியிட வேண்டும். எந்த பிரதி பலனும் எதிர்பராமல், மக்களுக்காவே வாழ்ந்து, படைத்தவன் பாரதி. இன்று எங்களுக்கெல்லாம், கைதட்டலும் கிடைக்கிறது, காசும் கிடைக்கிறது. ஆனால், கண்ணதாசன் காலம் அதன் முன்னேயே முடிந்து விட்டது. பாரதியின் மீதான, கண்ணாதாசனின், இந்தக் கருத்துதான், நம்முடைய நூலாசிரியரிடமும், அன்புடனும், பக்தியுடனும் வாஞ்சையுடனும் பாரதியின் மீது காணப் படுகிறது. இது மிகையல்ல. உண்மை இது கண்டீர்.